26

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**1981 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 28 ஆந் தேதிய**

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

(31.08.81 ஆந் தேதியன்று வெளியிடப்பட்டது.)

## மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்.

*வியாபார, கப்பற்போக்குவரத்து அமைச்சரால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது.*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்*

விலை : ரூபா 1.10 தபாற் செலவு : சதம் 75

## மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்

ச. வ.—ஓ. 34/81
1439

### மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்.

"மஹபொல உயர்கல்வி நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான நிதியமொன்று, இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ளதும், கொழும்பைச்சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மல்லவாராச்சிகே ஹேர்மன் பற்றிக் பெரேரா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டதுமான, இதனகத்துப்பின்னர், "உறுதி" எனக் குறிப்பீடு செய்யப்படும், 2773 ஆம் இலக்க, நம்பிக்கைப்பொறுப்பு உறுதிமூலம், இலங்கையில் கல்வி என்னும் இலட்சியத்தை முன்னேற்றும் நோக்கத்துக்காக இதன்முன்னர் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக பொதுமக்களினதும் தனிப்பட்டவர்களதும் அறக்கொடைகள் வழியாக, போதிய நிதிகள் சாத்தியமிகுமுறையில் சேகரிக்கப்பட்டுள்ளதாதலாலும், இதனகத்துப்பின்னர் தரப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க, சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு நிதியம் கூட்டிணைக்கப்படுவதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் விண்ணப்பமொன்றைச் செய்துள்ளார்களாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதிப்பது பொதுமக்கள் நன்மைக்கானதாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயர்.**

1. இச்சட்டம், 1981 ஆம் ஆண்டின்            ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

**மஹபொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தைக் கூட்டிணைத்தல்.**

2. இச்சட்டம் தொடங்கும் தேதியிலிருந்தும் அதன்பின்னரும், மஹபொல உயர்கல்வி நம்பிக்கைப்பொறுப்பு நிதியமானது இதனகத்துப் பின்னர், "நிதியம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும் "மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்" என்னும் பெயரின்கீழும், மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்; அத்துடன் அது, அப்பெயர் கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத் தொடரலாம், அத்துடன் அதற்கு எதிராக வழக்குத் தொடரவும்படலாம். அத்துடன், ஒரு பொது இலச்சினையை வைத்திருப்பதற்கும், பயன்படுத்துவதற்கும் அது முழுத் தத்துவமும் அதிகாரமும் உடையதாதல் வேண்டும்.

**நிதியத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர் சபை.**

3. (1) நிதியத்தின் நிருவாகம், முகாமை, கட்டுப்பாடு என்பன இதனகத்துப்பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு அமைக்கப்படும் ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளர் சபைக்கு உரித்தாக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

(2) இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்,

2 —எ 58258—2,825 (08/81)

நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :—

(அ) தாபகர் ;

(ஆ) பின்வரும் பதவிகளை அப்போதைக்கு வகிக்கும் ஆட்கள் :—

(i) உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் ;

(ii) உயர் கல்வி என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சுச் செயலாளர் ;

(iii) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தவிசாளர் ; அத்துடன்

(iv) வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரது அமைச்சுச் செயலாளர் ; அத்துடன்

(இ) இதன்கத்துப்பின்னர், " நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் " எனக் குறிப்பீடுசெய்யப்படுவோரான, தாபகரால் நியமிக்கப்படும் ஆட்கள் இருவர் ஐந்தாண்டு கொண்ட காலப்பகுதியொன்றுக்கு :

ஆயின், எவ்வாறாயினும், உறுதியின் 11 ஆம் பந்தியில் குறிப்பீடுசெய்யப்பட்டோரல்லாத தற்போதைய இரு நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், இச்சட்டத்தின்கீழ், முதன்முறை நியமிக்கப்பட்ட உறுப்பினர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

(3) சபையின் முதற்கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள், சபையின் தவிசாளராகவிருப்பதற்கென அவர்களின் எண்ணிக்கையிலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(4) சபையின் நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவர் தவிசாளருக்கு முகவரியிட்டனுப்பப்பட்ட எழுத்திலான கடிதம்மூலம் அவரது பதவியை எந்நேரத்திலும் துறக்கலாம்.

(5) ஆளொருவர்—

(அ) இலங்கையில் அல்லது வேறு ஏதேனும் நாட்டில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் கடனிறுக்கவகையற்றவரொருவராக அல்லது வங்கிமுறிந்தவரொருவராக வெளிப்படுத்தப்பட்டிருந்து, பேறுப்புவிடுவிக்கப்படாத கடனிறுக்க வகையற்றவராகவிருந்தால் அல்லது வங்கிமுறிந்தவராகவிருந்தால் ; அல்லது

(ஆ) ஒழுக்கக்கேட்டை உள்ளடக்குவதும், ஆறு மாதங்களுக்குக் குறையாதவொரு காலப்பகுதிக்கான மறியற்றண்டனைகொண்டு தண்டிக்கப்படற்பாலதுமான தவறொன்றுக்குக் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டவராகவிருந்தால் ; அல்லது

(இ) இலங்கையில் வலுவிலுள்ள ஏதேனும் சட்டத்தின்கீழ் சித்த சுவாதீனமற்றவரென அல்லது மனக்குறைபாடுடையவரெனக் காணப்பட்டவராகவிருந்தால் அல்லது வெளிப்படுத்தப்பட்டவராகவிருந்தால்,

அவர் சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்கு அல்லது பதவியில் தொடர்ந்திருப்பதற்கு தகைமையற்றவராதல் வேண்டும்.

(6) சபையின் ஒரு நியமிக்கப்பட்ட உறுப்பினர் அவரது பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர் அவரது பதவியை இறப்பின்மூலம், பதவி துறத்தல்மூலம் அல்லது வேறுவிதமாக வறிதாக்குமிடத்து, அவரது பதவிக்கு அடுத்துறுபவர் முன்னமைந்தவரது பதவிக்காலத்தின் முடிவுறு தெஞ்சியுள்ள காலப்பகுதிக்குப் பதவிவகித்தல் வேண்டும்.

(7) சபையின் தவிசாளர் சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தலைமை தாங்குதல் வேண்டும். தவிசாளர் ஏதேனும் கூட்டத்தில் சமூகமாயிராதவிடத்து, அத்தகைய கூட்டத்தில் சமுகமாயிருக்கும் உறுப்பினர்கள் அக்கூட்டத்துக்கான தவிசாளரை தம் மத்தியிலிருந்து தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

(8) சபையின் உறுப்பினர்களுக்கிடையே ஏதேனும் கருத்து வேறுபாடு ஏற்படுகின்றவிடயத்தில், பெரும்பான்மையோரது முடிபு, கட்டுப்படுத்தும் தன்மைவாய்ந்ததாதலும் பயனுடையதாதலும் வேண்டும்.

(9) சபையின் செயல் எதுவும் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர்கள் மத்தியில் ஏதேனும் வெற்றிடம் இருக்கின்றமை காரணமாக மாத்திரம் வலிதற்றதாகக் கருதப்படுதலாகாது.

(10) சபையின் ஏதேனும் கூட்டத்துக்கான கூட்டநடப்பெண் நான்கு உறுப்பினர்களாதல் வேண்டும்.

(11) பத்தாம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, சபையானது அதன் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கைமுறையை ஒழுங்குபடுத்துவதற்கும் அத்தகைய கூட்டங்களில் அலுவல்கள் நடாத்தப்படுவதற்கும் என விதிகளை ஆக்கலாம்.

4. நிதியத்தின் இலச்சினையானது— நிதியத்தின் இலச்சினை.

(அ) சபை காலத்துக்குக்காலம் தீர்மானிக்கக்கூடியவாறான அத்தகைய ஆளின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும்;

(ஆ) சபையால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் மாற்றஞ் செய்யப்படலாம்; அத்துடன்

(இ) சபையின் அங்கீகாரவனுமதியுடனன்றியும், சபையின் இரு உறுப்பினர்களின் சமூகத்திலன்றியும், ஆவணமெதிலும் பொறிக்கப்படுதலாகாது; அவ்விரு உறுப்பினர்களும், அவர்களது சமூகத்துக்கு அடையாளமாக, அந்த ஆவணத்தில் கையொப்பமிடுதல் வேண்டும்:—

5. நிதியத்தின் இலக்குகளும், குறிக்கோள்களும் பின்வருவனவாதல் வேண்டும்— நிதியத்தின் இலக்குகளும் குறிக்கோள்களும்.

(அ) இளைஞர்களுக்கு உயர் கல்வி வசதிகளை வழங்குதல்;

(ஆ) தமது இரண்டாம் நிலைக் கல்வியைத் திருப்திகரமாக பூரணப்படுத்தியுள்ள அருகதையுள்ள இளைஞர்கள் நூற் கல்விசார், கைத்தொழில்சார், அல்லது தொழில் நுட்ப கல்வியை, விடயத்துக்கேற்றவாறு, பல்கலைக் கழகமொன்றில் அல்லது தொழில்நுட்ப அல்லது உயர்கல்வி நிறுவகமொன்றில் பூரணப்படுத்துதலை இயலச் செய்யும் வகையில் உதவி வழங்குதல்;

(இ) இளைஞர்கள் அவர்களின் வாழ்க்கைத் தொழிற் திறன்களையும், தகுதியையும் அபிவிருத்திசெய்தலை இயலச்செய்யும் பொருட்டு, வாழ்க்கைத் தொழிற்பயிற்சி நிறுவகங்களை நிறுவுதலும், அவற்றை நிறுவுதலிலும்; முகாமை செய்தலிலும் உதவுதலும்;

(ஈ) கல்வியை மேம்படுத்துதலில் ஈடுபட்டுள்ள பாடசாலைகள் நிறுவகங்கள், மன்றங்கள் அத்துடன் அவற்றையொத்த நிறுவனங்களை நிறுவுதலும் அவற்றை முகாமைசெய்தலிலும் நடாத்துதலிலும் உதவுதலும்; அத்துடன்

(உ) கல்வியை மேம்படுத்துதலில் ஈடுபட்டுள்ள, விரிவுரையாளர்கள் ஆசிரியர்கள், அத்துடன் அத்தகைய ஆட்களின் திறன்களையும் தகுதியையும் அபிவிருத்தி செய்வதற்காகவும், முன்னேற்றுவதற்காகவும் உதவி வழங்குதல்.

**சபையின் தத்துவங்களும் பணிகளும்.**

6. (1) சபையானது, நிதியத்தின் பெயரில் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான, அல்லது உகந்தனவான, அல்லது இடைநேர்விளைவான எல்லாக் காரியங்களையும் செய்வதற்கு தத்துவமுடையதாதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவினால் வழங்கப்பட்ட தத்துவங்களின் பொதுமைக்குப் பங்கமின்றி, சபையானது பின்வரும் தத்துவங்களையும் பணிகளையும் உடையதாயிருத்தல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டு வளங்களிலிருந்தேனும், வெளிநாட்டு வளங்களிலிருந்தேனும் நிதிகள் பெறுதலும், மானியக்கொடைகளை, கொடைகளை, அல்லது நன்கொடைகளை காசாக அல்லது பொருளாகப் பெறுதலும்;

(ஆ) இச்சட்டத்தினால், அல்லது ஏதேனும் கொள்வனை, மானியக் கொடை, கொடை, மரணசாதனக் கையுதிர்ப்பு என்பதன் பயனாக அல்லது வேறு வகையில் அதற்கு உரித்தாக வரக்கூடிய ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தை எடுத்தல் அல்லது வைத்திருத்தல், அத்துடன் நிதியத்துக்கு உரித்துடையதாக வரக்கூடியதான ஏதேனும் ஆதனத்தை விற்றலும், ஈடுவைத்தலும், குத்தகைக்கு கொடுத்தலும், வழங்குதலும், உரித்துமாற்றுதலும், இறுதியாக அளித்தலும், சாட்டுதல் செய்தலும், கொடுத்து மாற்றுதலும் அல்லது வேறு வகையில் கையுதிர்த்தலும்;

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை முன்னேற்றுவதற்கென உண்ணாட்டிலும் வெளிநாடுகளிலும் மானியக் கொடைகளை அல்லது அறக்கொடைகளை அல்லது புலமைப் பரிசில்களை வழங்குதல்;

(ஈ) நிதியத்தின் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், அத்துடன் நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும் அவசியமாகக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் ஒன்றில் நேரடியாக அல்லது சபையினால் அதற்கென எழுத்தில் அதிகாரமளிக்கப்படும் அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள்மூலம் செய்து கொள்ளுதல் அல்லது புரிதல்;

(உ) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக, நிதியத்தின் அலுவலர்களையும், சேவையாளர்களையும் நியமித்தலும், ஊழியத்திலமர்த்தலும், அவர்களுக்கு ஊதியமளித்தலும், அத்துடன் அதன் ஊழியர்களின் நியமனம், பதவியுயர்வு, ஊதியம், ஒழுக்காற்றுக் கட்டுப்பாடு என்பன தொடர்பிலும், அவர்களுக்கு லீவும் வேறு நன்மைகளும் வழங்குதல் தொடர்பிலும், விதிகளை ஆக்குதலும் ;

(ஊ) நிதியத்துக்குச் சொந்தமான அல்லது நிதியத்தினால் வைத்திருக்கப்படும் ஏதேனும் காணியில் ஏதேனும் கட்டடத்தை அல்லது அமைப்பைக் கட்டியெழுப்புதல் அல்லது கட்டடம் அல்லது அமைப்பு கட்டியெழுப்பப்படச்செய்தல் ;

(எ) நம்பிக்கைப்பொறுப்புப் பணம் உட்பட பணத்தை முதலீடு செய்தல் தொடர்பில் சட்டத்தால் அதிகாரமளிக்கப்படுகின்றவாறான அத்தகைய எவையேனும் முதலீடுகளில் நிதியத்துக்குச் சொந்தமான பணத்தை, சபையின் தற்றுணிபின் பேரில், முதலீடுசெய்தலும், அத்தகைய முதலீடுகளை, சபையின் தற்றுணிபின்பேரில், மீளஅழைத்தலும், மீளமுதலீடு செய்தலும், வேறுபடுத்துதலும், அத்தகைய முதலீடுகளிலிருந்து சேரும் வருமானத்தைச் சேகரித்தலும் ;

(ஏ) நிதியத்தின் நோக்கங்களுக்காக, வங்கிக் கணக்குகளைத் திறத்தல், தொழிற்படுத்துதல், மூடுதல் அத்துடன் ஆதனத்தை பிணைப்பொறுப்பாக வைத்து அல்லது அத்தகைய பிணைப்பொறுப்பின்றிக் கடனெடுத்தலும், அல்லது பணம் பெறுதலும் ; அத்துடன்

(ஐ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கு இடைநேர்விளைவான, அல்லது உகந்தனவான அத்தகைய வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் செய்தல்.

நிதியத்துக்குச் செய்யப்படும் கொடுப்பனவுகள்.

7. பின்வருவன நிதியத்துட் செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) உண்ணாட்டிலிருந்து அல்லது வெளிநாட்டிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட எவையேனும் நிதிகள், பெறப்பட்ட மானியக்கொடைகள், கொடைகள் அல்லது நன்கொடைகள் அல்லது தேறிப் பெறப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட பணத்தொகைகள் ;

(ஆ) நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றும் நோக்கத்துக்காக காலத்துக்குக்காலம் அரசாங்கத்திடமிருந்து பெறப்பட்ட ஏதேனும் மானியக்கொடை ; அத்துடன்

(இ) முதலீடுகளிலிருந்து பெறப்படும் ஏதேனும் வருமானம் அல்லது நிதியத்துக்கு வருமதியாகவுள்ள வேறு வரவுகள்.

நிதியத்திலிருந்து செய்யப்படும் கொடுப்பனவுகள்.

8. பின்வருவன நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் :—

(அ) நிதியத்தைத் தொழிற்படுத்தல், தாபித்தல், பேணுதல் என்பவற்றுக்கு அவசியமான செலவுகள் ;

(ஆ) அலுவலர்கள், சேவையாளர்கள், வேறு ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகள் ; அத்துடன்

(இ) நிதியத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றும் நோக்கத்துக்கு அவசியமானவையென சபையினால் அங்கீகரிக்கப்படுகின்றவாறான அத்தகைய வேறெல்லாக் கொடுப்பனவுகளும்.

நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் ஒப்பந்தங்கள் முதலியன கூட்டுத்தாபனத்தினதே எனக் கருதப்படுதல்.

9. இச்சட்டம் நடைமுறைக்கு வரும் நேரத்தில் இருப்பனவான சொல்லப்பட்ட நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் எல்லா ஒப்பந்தங்களும், உடன்படிக்கைகளும், கடன்களும், பொறுப்புக்களும், இத்தால் அமைக்கப்படுகின்ற கூட்டுத்தாபனத்தின் ஒப்பந்தங்களெனவும், உடன்படிக்கைகளெனவும், கடன்களெனவும், பொறுப்புக்களெனவும் கருதப்படுதல் வேண்டும்.

கணக்குகளும் கணக்காய்வும்.

10. (1) சபையானது, நிதியத்தின் வரவுகளும் செலவுகளும், சொத்துக்களும் பொறுப்புக்களும், வேறெல்லாக் கொடுக்கல்வாங்கல்களும் பற்றிய முறையான கணக்குப் புத்தகங்களை வைப்பித்தல் வேண்டும்.

(2) சபையானது, ஒவ்வோர் ஆண்டிலும் திசெம்பர் முப்பத்தோராம் நாளன்று அதன் புத்தகங்களை சமன்படுத்துவித்தல் வேண்டுமென்பதுடன், அடுத்துவரும் மார்ச்சு முப்பத்தோராம் நாளுக்கு முன்னர், முதற்கூறப்பட்ட தேதிவரை தயாரிக்கப்பட்டதான நிதியத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் பற்றிய பொழிப்பொன்றைக் கொண்ட ஐந்தொகையொன்றையும் வரவு செலவுக் கணக்கொன்றையும் தயாரிப்பித்தலும் வேண்டும்.

(3) வரவு செலவுக் கணக்கும், ஐந்தொகையும், சபையினால் நிறைவேற்றப்படும் தீர்மானமொன்றின்மூலம் அவ்வாறு கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட சபையின் இரு உறுப்பினர்களால் கையொப்பமிடப்படுதல் வேண்டும்.

(4) கணக்காய்வாளர் தலைமையதிபதி அரசியலமைப்பின் 154 ஆம் உறுப்புரைக்கிணங்க நிதியத்தின் கணக்குகளை ஒவ்வோராண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும்.

நிதியத்தின் நிதியாண்டு.

11. நிதியத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

குறித்த சில தீர்வைகளிலிருந்தும் வரிகளிலிருந்தும் நிதியத்துக்கு விலக்களித்தல்.

12. (1) நிதியத்தின் இலக்குகளையும் குறிக்கோள்களையும் எய்தும் நோக்கங்களுக்காக இறக்குமதி செய்யப்பட்ட எவையேனும் பொருட்களுக்கான சுங்கத்தீர்வையையும் இறக்குமதித் தீர்வையையும் செலுத்துவதினின்றும் நிதியத்துக்கு விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(2) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தொன்பதாம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் வருமான வரியிலிருந்து அல்லது செல்வ வரியிலிருந்து நிதியத்துக்கு விலக்களிக்கப்படுதல் வேண்டும்.

(3) எவரேனுமாள் நிதியத்துக்கு கொடையொன்றை அளிக்குமிடத்து, அந்தக் கொடையின் மொத்தப் பெறுமதியின் அளவுக்கு, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் கொடை வரி செலுத்துவதிலிருந்து அவர் விலக்களிக்கப்பட்டவராதல் வேண்டும்.

(4) எவரேனுமாள் நிதியத்துக்கு நன்கொடையொன்றைச் செய்யுமிடத்து, அத்தகைய நன்கொடையானது, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின் நோக்கங்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட செலவினமொன்றாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதுடன்,

நன்கொடையளிப்பவர், அத்தகைய நன்கொடையின் மொத்தப் பெறுமதி தொடர்பில் அச்சட்டத்தின்கீழ் நிவாரணத்துக்கு உரித்துடையவராத லும் வேண்டும்.

ம்பிக்கைப் ாறுப்பு தியத்தின் ப்பந்தங்கள் தலியன ட்டுத்தாப த்தினதே னக் நதப்படுதல்.

(5) விடயத்துக்கேற்றவாறு, 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டம், மாநகர சபைகள் கட்டளைச்சட்டம் அல்லது நகர சபைள் கட்டளைச் சட்டத்தின் கீழ் செலுத்தபடற்பாலதான எவையேனும் விதங்களிலிருந்தும் வரிகளிலிருந்தும் நிதியத்துக்கு விலக்களிக் கப்படுதல் வேண்டும்.

ணக்குகளும் ணக்காய்வும்.

(6) விடயத்துக்கேற்றவாறு, 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தில், சுங்கக் கட்டளைச் சட்டத்தில், 1980 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, அபிவிருத்திச் சபைகள் சட்டத்தில், மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தில் அல்லது நகர சபைகள் கட்டளைச்சட்டத்தில் முரணாக எது எவ்வாறிருப்பினும், இப்பிரிவின் ஏற்பாடுகள் பயனுடையனவாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் கீழ் எடுக்கப் படும் வழக்கு நடவடிக்கை களுக்கெதிராகச் சபையுறுப்பினர் களுக்கும் நிதியத்தின் அலுவலர்கள் முதலியோருக் கும் பாதுகாப் பளித்தல்.

13. (1) சபை உறுப்பினர் எவருக்குமெதிராக, இச்சட்டத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட அல்லது நிதியத்தின் அலுவலர் சேவையாளர் அல்லது முகவர் எவருக்குமெதிராக, இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மேல் அத்தகைய உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயலுக்காக, தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதுவும் தொடுக்கப்படுதலாகாது.

தியத்தின் தியாண்டு.

(2) ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் நிதியத்தினால் அல்லது நிதியத்துக்கு எதிராகக் கொணரப்படும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும் நிதியத்தினால் உறப்படும் எவையேனும் செலவுகள், நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய ஏதேனும் தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் நிதியத்துக்குச் செலுத்தப்படும் அல்லது நிதியத்தினால் அறவிடப்படும் எவையேனும் செலவுதொகைகள் நிதியத்துக்கு வரவுவைக்கபடுதலும் வேண்டும்.

றித்த சில ர்வைகளி ருந்தும் ரிகளி ருந்தும் நிதியத்துக்கு லக்களித் ல்.

(3) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடு செய்யப்படுகின்றவரான அத்தகைய எவரேனுமாளினால் இச்சட்டத்தின்கீழ் அல்லது சபையின் பணிப்பின்மேல் செய்யப்படும் அல்லது செய்யப்படுவதாகக் கொள்ளப்படும் ஏதேனும் செயல் தொடர்பில் ஏதேனும் நீதிமன்றத்தின் முன்னர் அவருக்கெதிராகக் கொணரப்படும் தொடர்ச்சி அல்லது குற்றவழக்கு எதிலும் அத்தகைய ஆளினால் உறப்படும் செலவுகள் எவையும், அத்தகைய செயல் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென நீதிமன்றம் தீர்த்தால், அத்தகைய செலவுகள் அத்தகைய தொடர்ச்சியில் அல்லது குற்றவழக்கில் அவரால் அறவிடப்பட்டாலன்றி, நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

14. உடலுக்கெதிரான அல்லது ஆதனத்துக்கெதிரான எழுத்தாணையெதுவும், நிதியத்துக்கு எதிராகக் கொணரப்படும் வழக்கெதிலும், சபை உறுப்பினரெவருக்கும் எதிராக அல்லது நிதியத்தின் எவரேனும் அலுவலர், சேவையாளர் அல்லது முகவருக்கு எதிராக வழங்கப்படுதலாகாது.

சபையின் உறுப்பினரொருவரது அல்லது நிதியத்தின் அலுவலர் முதலானோரது உடலுக்கெதிராக அல்லது ஆதனத்துக்கெதிராக எழுத்தாணையெதுவும் வழங்கப்படுதலாகாது.

15. நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குட்படவும், அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல் வேண்டும்.

நிதியத்தின் அலுவலர்களும் சேவையாளர்களும், தண்டனைச் சட்டக்கோவையின் கீழ் பகிரங்க அலுவலர்களாகக் கருதப்படுதல்.

16. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட நிதியமானது ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன், அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குட்பட, நிதியம் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமொன்றாகக் கருதப்படுதல்.

17. உறுதியில் அடங்கியுள்ளது எது எவ்வாறிருப்பினும், இச்சட்டத்தின் ஏற்பாடுகள் பயனுடையனவாயிருத்தல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்க, இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் உறுதியின் ஏற்பாடுகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு எழுகின்றவிடத்து, இச்சட்டத்தின் ஏற்பாடுகள் மேலோங்கி நிற்பனவாதலும் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் உறுதியின் ஏற்பாடுகளை மேலோங்கி நிற்றல்.

18. இச்சட்டத்திலடங்கியுள்ளது எதுவும், இலங்கைக் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் அரசியல் அல்லது கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும், இச்சட்டத்திற் குறிப்பிடப்பட்டோரும், அவர்கள்மூலம் அல்லது அவர்களிலிருந்து அல்லது அவர்களின்கீழ் உரிமை கோருவோரும் தவிர்ந்த வேறு எவரேனும் ஆட்களின் உரிமைகளையேனும் பங்கப்படுத்துதலோ பாதித்தலோ ஆகாது.

குடியரசினதும் மறுபேர்களினதும் உரிமைகளைப் பேணல்.

19. இச்சட்டத்தில் “ தாபகர் ” என்பது, உறுதியின் முன்னுரையின் முதலாவதாகக் குறிப்பிடப்பட்ட பந்தியில் அவ்வாறு குறிப்பீடு செய்யப்பட்ட ஆள் எனப் பொருளாகும் என்பதுடன், அவரது இறப்புக்குப் பின்னர் வியாபாரம் என்னும் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் எனவும் பொருளாதல் வேண்டும்.

பொருள்கோடல்.

அட்டவணை

இல. 2773

(இதனகத்துப்பின்னர், தாபகர் என அழைக்கப்படுபவரும் குறிப்பீடு செய்யப்படுபவருமான) மாண்புமிகு லலித் வில்லியம் அத்துலத்முதலி என்பவரை ஒரு திறத்தவராகவும், (இதனகத்துப்பின்னர் தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் என அழைக்கப்படுவர்களும் குறிப்பீடுசெய்யப்படுபவர்களுமான) (1) நெவில் டன்பார் மிறஹவத்த சமரக்கோன் (2) வீரவாகு சிவசுப்பிரமணியம் (3) பீலிக்ஸ் ஸ்ரான்லி கிறிஸ்ரோபர் பெரேரா கல்பகே (4) எரிக் ஜாக்சன் த சில்வா (5) விதானலகே லக்ஷ்மன் பிரசாத் த மெல் (6) ஜெசீமா இஸ்மயில் என்பவர்களை மறு திறத்தவராகவும் கொண்டு அவர்களுடையில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு பெப்புருவரி மாதம் 23 ஆந் நாளாகிய இன்று, செய்துகொள்ளப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு உறுதி இது.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு மக்களினால் தேர்ந்தெடுக்கப்பட்ட பாராளுமன்ற உறுப்பினராகவும் தற்போது வியாபார கப்பற்றொழில் அமைச்சர் என்ற அமைச்சர் பதவியை வகிப்பவராகவும் தாபகர் இருக்கின்றாராதலாலும்,

தாபகர், தமது சொந்த அறிவுமூலமாகவும் அனுபவவாயிலாகவும் இலங்கையில் கல்வியை முன்னேற்றுவதற்குள்ள அவசியத்தைச் சிறப்பாக அறிந்திருப்பதோடு கல்வியை முன்னேற்றுதலானது தற்போதுள்ள வறுமைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான வழிவகையொன்றாகுமெனக் காண்கின்றாராதலாலும்,

தாபகர், சொல்லப்பட்ட இலங்கைக் குடியரசில் கிடைக்கக்கூடிய பெருமளவான மனித வளன்களைப்பற்றி அறிந்தவராகவும், சொல்லப்பட்ட இலங்கைக் குடியரசினதும் அதன் மக்களினதும் பெருநன்மைக்காவும் நலனுக்காகவும் இவ்வளன்களை அபிவிருத்தி செய்யவேண்டியதன் அவசியத்தை உணர்ந்தவராகவும் இருக்கின்றாராதலாலும்,

ஒவ்வொரு தனியாளும் அவரது சொந்த நலனுக்காகவும் நாட்டின் நலனுக்காகவும் அவரவரது பூரண ஆற்றல்களை அபிவிருத்தி செய்யத்தக்க வகையில் அவர்கள் ஒவ்வொருவருக்கும் உதவி அளிக்க வேண்டியதன் அவசியத்தை தாபகர் ஆழமாக உணர்ந்துள்ளாராதலாலும்,

மக்கள் ஒவ்வொருவரும் தத்தமது தனித்துவப்பாங்கில் திடவுறுதி காண்பதற்கு வழிவகை செய்யப்படாமலும் சீர்திருந்திய வாழ்க்கை முறையையும், வாழ்க்கைத் தரத்தையும் நன்கு உணருவதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்படாமலும் இருக்கும்போது உண்மையானதும், அர்த்தம் நிறைந்ததுமான அபிவிருத்தி இருக்க முடியாது என தாபகர் நம்புகின்றாராதலாலும்,

இந்நாட்டிலுள்ள வசதிகுறைந்தோரின் நலனுக்கென மஹபொல நிகழ்ச்சித் திட்டம் என அறியப்படும் நிகழ்ச்சித் திட்டமொன்றை இலங்கையின் கிராமப் பிரதேசங்களில் 1980 ஆம் ஆண்டில் தாபகர் ஆரம்பித்திருந்தாராதலாலும்,

கல்வி என்னும் இட்லசியத்தை முன்னேற்றுவதற்காக தாபகர் பகிரங்க மற்றும் தனிப்பட்ட நிதிகளைத் திரட்டியுள்ளதோடு, இதனகத்து தரப்பட்டுள்ள குறிக்கோள்களை எய்துவதன்பொருட்டு மஹபொல உயர்கல்வி நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் என அழைக்கப்படவேண்யதும் அறியப்படவேண்டியதுமான நிதியமொன்றைத் தாபிப்பதற்கு அவசியமான அதிகாரத்தைப் பெற்றுள்ளாராதலாலும்,

பல்கலைக்கழகக் கல்வி அத்துடன்/அல்லது உயர்கல்வி அத்துடன்/அல்லது கைத்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப அத்துடன்/அல்லது வாழ்க்கைத் தொழில் வினைத் திறமைகள் தகைமைகள் என்பவற்றை அபிவிருத்திசெய்து மேற்கொண்டு தொடருவதற்கு அருகதையுள்ள மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களையும் ஏனைய கல்வி வசதிகளையும் ஏற்பாடுசெய்வதற்குத் தாபகர் விரும்புகின்றாராதலாலும், தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் இதனகத்து"

பின்னர் ஏற்பாடுசெய்யப்பட்ட முறையில் சொல்லப்பட்ட அறக்கொடையின் முகாமைக்கான நம்பிக்கைப்பொறுப்பாளர்களாகச் செயற்படுவதற்கு உடன்பட்டுள்ளார்களாதலாலும்.

ஆகவே இந்நம்பிக்கைப்பொறுப்பு உறுதி பின்வருமாறு அமைகின்றது :

1. எக்குறிக்கோள்களுக்காக நம்பிக்கைப்பொறுப்பு தாபிக்கப்பட்டுள்ளதோ அக்குறிக்கோள்கள் பின்வருவனவாகும் :—

(அ) இடைநிலைக் கல்வியைத் திருப்திகரமாக முடித்துள்ளவர்களும் தமது பல்கலைக்கழகக் கல்வியை அத்துடன்/அல்லது உயர்கல்வியை அத்துடன்/அல்லது கைத்தொழில் அத்துடன்/அல்லது தொழினுட்ப அத்துடன்/அல்லது வாழ்கைத் தொழில் வினைத்திறமைகள், தகைமைகள் என்பவற்றை அபிவிருத்திசெய்து மேற்கொண்டு தொடரக் கருதுகின்றவர்களுமான அருகதையுள்ள மாணவர்களுக்கு ஆண்டுதோறும் புலமைப் பரிசில்களை அளித்தல்.

(ஆ) கல்வி நிறுவகங்கள், பாடசாலைகள், நிதித்தாபனங்கள் மற்றும் இவை போன்றவற்றை நிறுவுதல் அத்துடன்/அல்லது நிறுவுதலில் உதவியளித்தல் அத்துடன்/அல்லது முகாமை செய்வதிலும் நடாத்துவதிலும் உதவியளித்தல்.

(இ) ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், அத்துடன் இலங்கையில் கல்வியை முன்னேற்றுவதில் ஈடுபட்டுள்ள ஏனைய ஆட்கள் என்போரது பணித் திறமைகளையும் தகைமைகளையும் அபிவிருத்திசெய்தல் அத்துடன்/அல்லது முன்னேற்றுதல்.

(ஈ) குறிக்கோள்களை எய்துவதற்கு அவசியமாகக் கூடியவாறான அல்லது உகந்தனவாதக்கூடியவாறான மற்றெல்லாச் செயல்களையும் விடயங்களையும் செய்தல்.

2. தாபகர் காசாக பத்தாயிரம் (ரூபா. 10,000) அடங்கிய நிதியத்தை இதனகத்து அடங்கியுள்ள தத்துவங்களுடனும் ஏற்பாடுகளுடனும், தத்துவங்களின் கீழும் ஏற்பாடுகளின்கீழும், தத்துவங்களுக்கமைவாகவும் ஏற்பாடுகளுக்கமைவாகவும், வைத்திருப்பதற்காகவும் நம்பிக்கைப்பொறுப்பில் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பயன்படுத்துவதற்காகவும், நம்பிக்கைப்பொறுப்பாளர்களுக்கு இத்தால் ஒப்படைக்கின்றார்.

3. இச்சாதனத்தில் அடங்கியவற்றைக் கொண்டுநடாத்தும் முறையையும் விதத்தையும் அத்துடன் இதனகத்துத் தரப்பட்டவாறான ஏதேனும் புலமைப்பரிசிலை அல்லது வசதியை வழங்கும் அல்லது அளிக்கும் முறையையும் விதத்தையும் விதித்துரைக்கும் விதிகளையும் துணைவிதிகளையும் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் ஆக்குதல் வேண்டும்.

4. நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் வருமானம் போதியதாக இருந்தால் நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் தாம் பொருத்தமானவையெனக் கருதக்கூடியவாறான அத்தகைய கூடிய அளவு எண்ணிக்கையினவான புலமைப்பரிசில்களை அளிக்கலாம் அத்துடன் அத்தகைய வசதிகளையும் வழங்கலாம் ; அத்துடன் அவர்கள் தமது தற்றுணிபில் பொருத்தமானதெனக் கருதும் அத்தகைய காலப்பகுதியை விதித்துரைக்கலாம் ; அத்துடன் அத்தகைய பணத்தொகையை ஏற்பாடு செய்யலாம் அத்துடன் அத்தகைய அளிப்புக்கு அல்லது வழங்குகைக்கு அத்தகைய பெயரைக் குறித்தொதுக்கலாம்.

5. நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தமது தற்றுணிபில் பொருத்தமானவையெனக் கருதுகின்றவாறான அத்தகைய பிணைப்பொறுப்புகளிலும் அத்துடன் தாம் பொருத்தமெனக் கருதும்வாறாகக் காணிகளைக் கொள்ளுதற்கும் வைத்திருப்பதற்கு நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தை முதலீடு செய்யலாம்.

6. நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் வருமானத்திலிருந்து மிகச் சிறந்த பயன்தரும்வகையில் இவ்வறக்கொடையை முகாமை செய்தல் வேண்டும்.

7. நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்துக்கு உதவுதொகை அளிப்பதற்கும், அத்தகைய நன்கொடைகளையும், அறக்கொடைகளையும் கொடைகளையும், அவைபோன்றவற்றையும் பெறுவதற்கும் ஏதேனும் குழுவை, அல்லது எவரேனும் ஆளை அல்லது ஏதேனும் ஒழுங்கமைப்பை அழைக்கலாம்.

8. நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் இந்நம்பிக்கைப் பொறுப்பைக் கொண்டு நடாத்தும் நோக்கங்களுக்காக நம்பிக்கைப் பொறுப்பு ஆதனத்தைப் பிணைப் பொறுப்பாகவைத்து பணம் கடன் எடுப்பதற்குத் தத்துவமுடையவர்களாதல் வேண்டும்.

9. இச்சாதனத்திலடங்கியவற்றின் கீழ், தாபகரும், அவர் உயிருடன் இருக்குமளவுக்கு ஒரு நம்பிக்கைப் பொறுப்பாளர் ஆதல் வேண்டும்; அத்துடன் அவர் இறந்ததன்மேல் அல்லது மறைந்ததன்மேல், அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட அவரது சாட்டுதல்காரர் அல்லது மரபுரிமையாளர் அவரின் இடத்துக்குப் பதிலீடு செய்யப்படுதல் வேண்டும்.

10. எவரேனும் நம்பிக்கைப்பொறுப்பாளர் வங்கிமுறிந்தவராக வந்தால் அல்லது ஒழுக்கக்கேட்டை உள்ளடக்கும் தவறொன்றுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டால் அல்லது கடனிறுக்கவகையற்றவராக வந்தால் அல்லது தொடர்ச்சியாக ஆறுமாதங்கள் கொண்ட ஒரு காலப்பகுதிக்கு சொல்லப்பட்ட இலங்கைக் குடியரசில் இல்லாதவராகவிருந்தால் அல்லது உடற்செயற்பாடு தொடர்பில் இயலாதவராகவிருந்தால், தாபகர் ஒரு நம்பிக்கைப்பொறுப்பாளராகத் தொடர்ந்திருக்கும் காலமளவுக்கு அவரது சம்மதத்துடன், எஞ்சியிருக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் பதிலாள் ஒருவரை நியமித்தல் வேண்டும்.

11. பின்வரும் தற்போதைய நம்பிக்கைப் பொறுப்பாளர்கள், மேற்சொல்லப்பட்டவாறாக முன்னதாகவே வேறுவகையாக முடிவுறுத்தப்பட்டாலொழிய, அவர்களது பெயர்களுக்கு நேரே காட்டப்பட்டுள்ள பதவிகளை அத்துடன்/அல்லது பதவிப் பெயர்களை அவர்கள் வகித்திருக்கும் காலமளவுக்கு, இச்சாதனத்தில் அடங்கியவற்றின்கீழ் நம்பிக்கைப்பொறுப்பாளர்களாகத் தொடர்ந்திருத்தல் வேண்டும், அவர்களாவோர்—

(அ) நெவில் டன்பார் மிரகஹவத்த சமரக்கோன், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பிரதம நீதியரசர் பதவியை அத்துடன்/அல்லது பதவிப்பெயரை அவர் வகித்திருக்கும் காலமளவுக்கு;

(ஆ) எரிக் ஜாக்சன் த சில்வா, உயர்கல்வி அமைச்சருக்கான செயலாளர் பதவியை அத்துடன்/அல்லது பதவிப் பெயரை அவர் வகித்திருக்கும் காலமளவுக்கு;

(இ) பீலிக்ஸ் ஸ்ரான்லி கிறிஸ்ரோபர் பெரேரா கல்பகே, பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுத் தவிசாளர் பதவியை அத்துடன்/அல்லது பதவிப் பெயரை அவர் வகித்திருக்கும் காலமளவுக்கு;

(ஈ) விதானலகே லக்ஷ்மன் பிரசாத் த மெல், வியாபார, கப்பற்றொழில் அமைச்சருக்கான செயலாளர் பதவியை அத்துடன்/அல்லது பதவிப்பெயரை அவர் வகித்திருக்கும் காலமளவுக்கு;

அத்துடன், அத்தகைய ஆள் மேற்சொல்லப்பட்டவாறான பதவியை அத்துடன்/அல்லது பதவிப்பெயரை வகிக்காதொழியுமிடத்து, அத்தகைய ஆள் இச்சாதனத்தில் அடங்கியவற்றின்கீழ் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவராக இல்லாதொழிதல் வேண்டும்.

12. பின்வரும் தற்போதைய நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், மேற்சொல்லப் பட்டவாறாக முன்னதாகவே, வேறுவகையாக முடிவுறுத்தப்பட்டாலொழிய, அவர்கள் உயிருடன் இருக்கும் காலமளவுக்கு இச்சாதனத்திலடங்கியவற்றின்கீழ் தொடர்ந்திருந்துவருதல் வேண்டுமென்பதுடன், அவர்கள் இறந்ததன்மேல் அல்லது மறைந்ததன்மேல் இச்சாதனத்தில் அடங்கியவற்றின் கீழ் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக இல்லாதொழிதலும் வேண்டும்.

ஒப்பம் : என். டி. எம். சமரக்கோன்,

ஒப்பம் : வீ. சிவசுப்பிரமணியம்,

ஒப்பம் : எவ். எஸ். சி. பி. கல்பகே,

ஒப்பம் : எரிக் ஜாக்சன் த சில்வா,

ஒப்பம் : லலித் டபிள்யு. அத்துலத்முதலி,

ஒப்பம் : டபிள்யு. லக்ஷ்மன் பீ. த மெல்,

ஒப்பம் : ஜெசிமா இஸ்மயில்.

13. தற்போதைய நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் அல்லது அவர்களுள் எவரேனும் ஒருவர் இச்சாதனத்தில் அடங்கியவற்றின்கீழ் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவராக இல்லாதொழிகின்றவிடத்து, அவர் உயிருடன் இருக்கும் காலமளவுக்கு தாபகர், அத்தகைய நம்பிக்கைப்பொறுப்பாளருக்காக பதிலாள் ஒருவரை நியமித்தல் வேண்டும். தாபகர் நம்பிக்கைப்பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான தமது உரிமையை மரணசாதனம் மூலம் சாட்டுதல் செய்யலாம்; ஆனல், அத்தகைய சாட்டுதல் எதுவும் செய்யப்படாதிருக்குமிடத்து, பதில் நம்பிக்கைப் பொறுப்பாளர் ஒருவரை நியமிப்பதற்கான உரிமை, எஞ்சியிருக்கும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களால் பிரயோகிக்கப்படுதல் வேண்டும்.

14. நம்பிக்கைப்பொறுப்பு ஆதனத்தின் முகாமையும் கட்டுப்பாடும் நம்பிக்கைப் பொறுப்பாளர்களுக்குரித்தாதல் வேண்டும்.

15. நம்பிக்கைப்பொறுப்பாளர்களுக்கிடையே அபிப்பிராய பேதம் இருக்கின்றவிடத்து, நம்பிக்கைப்பொறுப்பு தொடர்பிலான நம்பிக்கைப்பொறுப்பாளர்களுள் பெரும்பான்மையோரின் முடிபு கட்டுப்படுத்துவதாதலும் பயனுறுதியுடையதாதலும் வேண்டும் என்பதுடன், அது நிறைவேற்றப்படுதலும் வேண்டும்.

16. அதன் குறிக்கோள்களிலான பற்றுக்குறை காரணமாக அல்லது நம்பிக்கைப்பொறுப்பினை நிறைவேற்றுவது இயலாததாகவந்ததன் காரணமாக நம்பிக்கைப்பொறுப்பு முறிவடைகின்றவிடத்து, அவற்றையொத்த குறிக்கோள்களுக்கு எஞ்சிய நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைப் பிரயோகிப்பதற்காக நம்பிக்கைப் பொறுப்பாளர்கள் தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றில் பிரேரணையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

17. நம்பிக்கைப்பொறுப்பாளர்கள் மோசடித் தவறுக்கும் குற்றவாளிகளாக இருந்தாலொழிய நம்பிக்கைப்பொறுப்பானது, எச்சந்தர்ப்பத்திலும், அந்நம்பிக்கைப்பொறுப்புச் சொத்துக்கு ஏற்பட்ட ஏதேனும் இழப்புக்குப் பொறுப்புடையதாதலாகாது.

18. இது ஒரு பகிரங்கத் தரும நம்பிக்கைப்பொறுப்பாக இருப்பதனுல், நம்பிக்கைப்பொறுப்பு ஆதனம் எச்சந்தர்ப்பத்திலும், தாபகருக்கோ, அவரது வழியுரிமையாளர்களுக்கோ, சாட்டுதல்காரர்களுக்கோ வேறெவரேனுமாளுக்கோ மீளச் சென்றடைதல் ஆகாது.

19. நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் எப்பாகமும் ஒன்றில் அதன் மூலப்பொருளாயினுஞ்சரி, அல்லது அதிலிருந்து பெறப்படும் வருவாயாயினுஞ்சரி இத்தால் உருவாக்கப்படும் நம்பிக்கைப்பொறுப்பின் நோக்கம் தவிர்ந்த வேறெந் நோக்கத்துக்காகவும் பயன்படுத்தப்படுதல் ஆகாது.

இதற்கத்தாட்சியாக, இதற்கான திறந்தவர்கள் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் (1981) ஆண்டு பெப்ருவரி மாதம் இருபத்து மூன்றும் நாளாகிய இன்று இதற்கும், இத்தாற்பரியம்படவுள்ள இன்னுமிரண்டு பிரதிகட்கும் தமது ஒப்பங்களை வைத்துள்ளனர்.

எமது முன்னிலையில் ஒப்பமிடப்பட்டது. அத்துடன் இதற்கான உறுதி முடிப்புக்காரர்கள் எமக்கு மிகவும் பரிச்சயமானவர்களெனவும் அவர்களது சரியான பெயர்கள், தொழில்கள், வசிப்பிடங்கள் என்பவற்றை நாம் அறிவோமெனவும் வெளிப்படுத்துகிறோம்.

ஒப்பம் : என். டி. எம். சமரக்கோன்
ஒப்பம் : வீ. சிவசுப்பிரமணியம்
ஒப்பம் : எவ். எஸ். சி. பி. கல்பகே
ஒப்பம் : எரிக் ஜாக்சன் த சில்வா
ஒப்பம் : லலித் டபிள்யு. அத்துலத் முதலி
ஒப்பம் : டபிள்யு. லக்ஷ்மன் பி. த மெல்
ஒப்பம் : ஜெசீமா இஸ்மயில்

1. ஒப்பம் : ஜே. ஆர். ஜயவர்வன
2. ஒப்பம் : ஆர். பிரேமதாச

ஒப்பம் : எம். எச். பி. பெரேரா,
பிரசித்த நொத்தாரிசு.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு, மல்லவாராச்சிகே ஹேமன் பற்றிக் பெரேரா ஆகிய நான், முற்போந்த சாதனம் (1) "என். டி. எம். சமரக்கோன்", (2) "வீ. சிவசுப்பிரமணியம்", (3) "எஸ். சி. பி. கல்பகே" எனவும் (4) சிங்களத்திலும் (5) சிங்களத்திலும் முறையே ஒப்பமிடப்பட்ட இதிற் கூறப்பட்ட உறுதிமுடிப்புக்காரர்களாகிய (1) நெவில் டனபார் மிறஹவத்த சமரக்கோன், (2) வீரவாகு சிவசுப்பிரமணியம், (3) பீலிக்ஸ் ஸ்ரான்லி கிறிஸ்ரோபர் பெரேரா கல்பகே, (4) எரிக் ஜாக்சன் த சில்வா, (5) லலித் வில்லியம் அத்துலத் முதலி ஆகியோரால் "ஜே. ஆர். ஜயவர்தன" எனவும், சிங்களத்தில் முறையே ஒப்பமிட்ட சாட்சிக்காரர் மாண்புமிகு ஜூனியஸ் றிச்சாட் ஜயவர்தன, மாண்புமிகு றணசிங்க பிரேமதாச ஆகிய இவர்கள் முகதாவில், முறையாக வாசிக்கப்பட்டதெனவும், இவர்களனைவரையும் நானறிவேனெனவும், இது உறுதிமுடிப்புக்காரர்களாலும் சொல்லப்பட்ட சாட்சிக்காரர்களாலும் சொல்லப்பட்ட நொத்தாரிசாகிய என்னாலும் எனது முன்னிலையிலும் ஒருவருக்கொருவர் முன்னிலையிலும் கொழும்பில் ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு (1981) பெப்புருவரி மாதம் இருபத்துமூன்றும் நாள் (23) ஆகிய இன்று ஒரே சமயத்தில் அனைவரும் சமுகமாயிருந்து ஒப்பம் வைக்கப்பட்டதெனவும் இத்தால் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்துடன் மேலும், முற்போந்த சாதனம் அவ்வாறு வாசிக்கப்பட்டு மேற்சொல்லப்பட்டவாறாக ஒப்பமிடப்படுமுன்னர், மூலப்பிரதி இணைப்பிரதி ஆகிய இரண்டிலும், 5 ஆம் பக்கத்தில் 4 ஆம் வரியிலுள்ள "by" என்னும் சொல்லில் உள்ள "y" என்னும் எழுத்தும், 26 ஆம் வரியிலுள்ள "or" என்னும் சொல்லில் உள்ள "r" என்ற எழுத்தும், 30 ஆம் வரியில் "Two" என்ற சொல்லும் அழிப்புக்கு மேலாகத் தட்டச்சிடப்பட்டன என சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்துடன், இறுதியாக, இச்சாதனத்தின் இணைப்பிரதியில் 10/- ரூபா பெறுமதியான முத்திரையொன்றுண்டெனவும், மூலப்பிரதியில் 1 /- ரூபா பெறுமதியான முத்திரையொன்றுண்டெனவும் சொல்லப்பட்ட முத்திரைகள் என்னால் வழங்கப்பட்டன எனவும் சான்றுப்படுத்தி அத்தாட்சிப்படுத்துகிறேன்.

அத்தாட்சிப்படுத்திய தேதி
1981, பெப்புருவரி 23 ஆம் தேதி.

ஒப்பம் : எம். எச். பி. பெரேரா,
பிரசித்த நொத்தாரிசு.

**சாட்சிக்காரர்கள் :**

1. ஒப்பம் : டி. என். மட்டுமகே
2. ஒப்பம் :கே. தர்மசேன

ஒப்பம் : டபிள்யு. லக்ஷ்மன் பீ. த மெல்.

ஒப்பம் : ஜெசிமா இஸ்மயில்

ஒப்பம் : எம். பி. எச். பெரேரா
பிரசித்த நொத்தாரிசு.

14 மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு மல்லவாரச்சிகே ஹேமன் பற்றிக் பெரேரா ஆகிய நான், முற் போந்த சாதனம் இதிற் கூறப்பட்ட உறுதிமுடிப்புக்காரர்களாகிய விளக்கமில்லா மல் ஒப்பமிட்ட (5) விதானலகே லக்ஷ்மன் பிரகாத் த மெல், "ஜெசிமா இஸ்மயில்" எனக் ஒப்பமிட்ட (6) ஜெசிமா இஸ்மயில் ஆகியோரால் "டி. என். மட்டுமகே" எனவும், "கே. தர்மசேன" எனவும் ஒப்பமிட்ட சாட்சிக்காரர்கள், பாதுக்க, மடொலுவாவவைச் சேர்ந்த டொன் நொறிஸ் மட்டுமகே, ராஜகிரிய, ஒபயசேகர பட்டினம் 78 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த குடகொடகே தர்மசேன, ஆகிய இவர்கள் முகதாவில் முறையாக வாசிக்கப்பட்ட தெனவும், இவர்களனைவரையும் நானறிவேனெனவும், இது உறுதி முடிப்புக் காரர்களாலும் சொல்லப்பட்ட சாட்சிக்காரர்களாலும் சொல்லப்பட்ட நொத்தாரி சாகிய என்னாலும், எனது முன்னிலையிலும் ஒருவருக்கொருவர் முன்னிலையிலும் கொழும்பில், ஆயிரத்துத் தொளாயிரத்து எண்பத்தோராம் ஆண்டு (1981) யூன் மாதம் இருபத்தொன்பதாம் (29) நாளாகிய இன்று ஒரே சமயத்தில் அனை வரும் சமுகமாயிருந்து ஒப்பம் வைக்கப்பட்டதெனவும் இத்தால் சான்றுப் படுத்தி அத்தட்சிப்படுத்துகிறேன்.

ஒப்பம் : எம். எச். பி. பெரேரா,
பிரசித்த நொத்தாரிசு.

அத்தாட்சிப்படுத்திய தேதி
1981, யூன் 29 ஆம் தேதி.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 30; (வெளிநாடு) ரூபா 40, ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்காய சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், த. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.